ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1616/23 - 2009 අගෝස්තු 24 වැනි සඳුදා - 2009.08.24
*1616/23 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. - பீ. 4/98*

### *1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்*

*1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம், 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின்கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

*காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.*

கொழும்பு,
*2009, ஓகத்து 21.*

### ஒழுங்குவிதிகள்

*பாகம் I*

பொது

1. இவ்வொழுங்குவிதிகள் 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க உரித்துப் பதிவு (காப்புறுதி நிதிய) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்), சட்டத்தின் 62 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்டதுமான காப்புறுதி நிதியத்தின் குறிக்கோள்– நிதியத்தின் குறிக்கோள்.

(அ) சட்டத்தின் 59 ஆம் பிரிவின்கீழ் நீதிமன்றக் கட்டளையொன்றைப் பின்பற்றி இடாப்பின் ஏதேனும் சீர்திருத்தம் காரணமாக ; அல்லது

(ஆ) சட்டத்தின் 59 ஆம் பிரிவின்கீழ் நீதிமன்றக் கட்டளையொன்றின் விளைவாக இடாப்பைச் சீர்திருத்தாமை காரணமாக

நட்டத்தை அல்லது சேதத்தை உறுகின்ற அல்லது பங்கமேற்படுத்தப்பட்டுள்ள எவரேனுமாளுக்கு நீதிமன்றக் கட்டளையின்மேல் நட்டோத்தரவாதமளித்தல் வேண்டும்.

3. நிதியத்தின் பிரதான நிருவாகியும் தொழிற்படுத்துநரும் உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர், நிதியத்தின் முறையான தொழிற்பாட்டுக்கும் நிருவாகத்துக்கும் முகாமைக்கும் பொறுப்பாகவிருத்தலும் வேண்டும். நிதியத்தின் பிரதான நிருவாகியும் தொழிற்படுத்துநரும்.

நிதியத்தின் நிருவாகத்தில் முகாமைச் சபை உதவுதல்.

4. (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையொன்று, நிதியத்தின் தொழிற்பாட்டிலும் நிருவாகத்திலும் முகாமையிலும் உரித்துப் பதிவாளர் தலைமையதிபதிக்கு உதவுதல் வேண்டும்.

மத்திய வங்கியானது நிதியத்தை மேற்பார்வை செய்தல்.

5. மத்திய வங்கியானது நிதியத்தின் நிருவாகத்தையும் தொழிற்பாட்டையும் முகாமையையும் மேற்பார்வை செய்தல் வேண்டும்.

நிதியத்தின் முகவரி.

6. நிதியத்தின் முகவரியானது, பத்தரமுல்லை, உரித்துப் பதிவாளர் தலைமையதிபதித் திணைக்களத்தின் அலுவலகமாகவிருத்தல் வேண்டும்.

கொடுப்பனவுகள் மற்றும் வரும்படிகள் விகிதத்தின்மீது உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல்.

7. உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியானவர், நிதியத்திலுள்ள பணங்களுக்கும் நிதியத்தினால் தோற்றுவிக்கப்பட்டுப் பெறப்படற்பாலதான வருமானத்துக்கும் தொடர்புடையதாகச் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளின் தொகையாகவுள்ள கொடுப்பனவுகள் மற்றும் வரும்படிகள் விகிதத்தின்மீது முறையான கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் வேண்டும்.

நிதிகள் போதாதவையாக அல்லது விஞ்சுதலானவையாக இருக்கும் பட்சத்தில், உரித்தப் பதிவாளர் தலைமையதிபதி, சபையின் கலந்தாலோசனையுடன், நிலைமைக்குத் தோதானதாகவிருக்கின்றவாறான அத்தகைய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி முறையான கணக்குகளை வைத்திருத்தல்.

8. உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியானவர், நிதியத்திற்குக் கைமாற்றப்பட்டவையும் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டவையுமான பணங்கள்பற்றி முறையான கணக்குகளை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கைமாற்றங்களும் கொடுப்பனவுகளும் பற்றிய சான்றைக் கவனமாகப் பேணிக்காத்தலும் வேண்டும்.

இயன்றளவு அதியுச்ச நூற்று வீதம் அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்யப் படுதல்

9. மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைக்குப் பொறுப்பாகவுள்ள பணிப்பாளரினதும் திறைசேரிப் பிரதிச் செயலாளரினதும் மதியுரையின்மேல், உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி, நிதியத்திலுள்ள பணங்களின் இயன்றளவு அதியுச்ச நூற்றுவீதத்தை அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்தல் வேண்டுமென்பதுடன், திரவத்தன்மைத் தேவைப்பாடுகள், அத்தகைய பிணையங்களை ஆளுகின்ற ஒழுங்குவிதிகளுக்கிணங்கியொழுக ஈடுசெய்யப்படுதலும் வேண்டும்.

நிதியத்தின் நிதிசார் தொழிற்பாடு பற்றி வங்கியானது அறிவித்தல்.

10. வங்கியானது, நிதியத்தின் நிதிநிலையைமைபற்றியும் முற்போந்த ஆறு மாதங்களின்போது செய்யப்பட்ட முதலீடுகள் பற்றியும் ஒவ்வோராண்டும் யூலை 1 ஆந் திகதிக்கு முன்னரும் சனவரி 1 ஆந் திகதிக்கு முன்னருமாக அரையாண்டுக்கொரு தடவை உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

கணக்காய்வு.

11. நிதியமானது ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், கணக்காய்வாளரின் அறிக்கையானது, ஆண்டறிக்கை முன்வைக்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின்னர் வெளியிடப்படுதலும் வேண்டும் ; உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்டதும், நிதியத்தின் மீதானதுமான வருடாந்த நிருவாக அறிக்கை அதனோடு இணைக்கப்படுதல் வேண்டும்.

நிருவாக அறிக்கை.

12. உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியானவர், நிதியத்தின் மீதான தமது வருடாந்த நிருவாக அறிக்கையைச் சபைக்கும், உரித்துப் பதிவாளர் தலைமையதிபதித் திணைக்களத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கும், திறைசேரிச் செயலாளருக்கும், மத்திய வங்கியின் ஆளுநருக்கும், நியதிச்சட்டமுறையில் தேவைப்படுத்தப்பட்ட வேறெவரேனும் அதிகாரிகளுக்கும் முன்வைத்தல் வேண்டும்.

## பாகம் II

### முகாமைச் சபை

சபையைத் தாபித்தலும் அதன் அமைப்பும்.

13. (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிதியத்தின் முகாமைச் சபையொன்று இருத்தல் வேண்டும் ; அது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி ; அவரே சபையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) உரித்துப் பதிவாளர் தலைமையதிபதித் திணைக்களத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சின் பிரதிநிதியொருவர் ;

(இ) காணிகள் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சின் பிரதிநிதியொருவர் ;

(ஈ) நிதி என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அவ்வமைச்சின் பிரதிநிதியொருவர் ;

(உ) மத்திய வங்கியின் ஆளுநரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மத்திய வங்கியின் பிரதிநிதியொருவர் ; அத்துடன்

(ஊ) பிரதான பெறுமான மதிப்பீட்டாளர்.

14. சபையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :- சபையின் பணிகள்.

(அ) நிதியத்தின் ஒட்டுமொத்த முகாமைக்கும் நிருவாகத்துக்கும் பொறுப்பாகவிருத்தல் ;

(ஆ) சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி நட்டோத்தரவாதத்துக்காகன உரிமைக் கோரிக்கையொன்று நீதி நியாயமானதா அல்லதாவென்பதுபற்றி உரித்துப் பதிவாளர் தலைமையதிபதிக்கு மதியுரையளித்தல் ;

(இ) அதன் பணிகளையும் பொறுப்புக்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கான அதன் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துகின்ற விதிகளையும் வழிகாட்டு நெறிகளையும் அபிவிருத்தி செய்தல் மற்றும் கடைப்பிடித்தல் ;

(ஈ) நட்டோத்தரவாதத்துக்கான உரிமைக்கோரிக்கை பற்றிப் புலனாய்வு செய்தல் மற்றும் எந்த ஆட்களின் குற்றமுடைமை இச்சட்டத்தின்கீழ் நட்டோத்தரவாதக் கொடுப்பனவை அவசியமாக்கியதோ அந்த ஆட்களை அடையாளங்காணுதல் ; அத்துடன் நிதியத்துக்குத் தொன்னிலைமீட்புச் செய்தவற்கு அத்தகைய ஆட்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய தொகைகளைத் தீர்மானித்தல் ;

(உ) பந்தி (ஈ) இன் கீழ் நிதியத்துக்கு விளைவிக்கப்பட்ட நட்டத்தை அறவிடுவதற்காக உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகள் பற்றி அவருக்கு மதியுரையளித்தல் ;

(ஊ) நிதியத்தின் கணக்குகளும் நிதியத்தின் தொழிற்பாடுகளும் பற்றிய பதிவேடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கிணங்கப் பேணப்படுகின்றனவாவென்பதைப் புலனாய்வு செய்தல் மற்றும் அவசியமானபோதிலெல்லாம் அது தொடர்பாக உரித்துப் பதிவாளர் தலைமையதிபதிக்கு வழிகாட்டுதல் ;

(எ) சபையினால் கையாளப்படும் எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் பதிவேடுகளின் செம்மையையும், எல்லாவற்றையும் உள்ளடக்குகின்ற தன்மையையும், காப்பையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமான எல்லா வழிமுறைகளையும் எடுத்தல் ;

(ஏ) உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியினாலும் சபையினாலும் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்ட எல்லா நிதிக்கூற்றுக்களையும் பரிசீலனை செய்தல் ;

(ஐ) நிதியத்துக்கும் நிதியத்திலிருந்துமான பணங்களின் உள்வரவையும் வெளிச்செல்கையையும் கிரமமான முறையில் பரிசீலனை செய்தல் மற்றும் ஏதேனும் பாதகமான நிலைமையைச் சீர்செய்வதற்குத் தோதான வழிமுறைகளை எடுத்தல் ; அத்துடன்

(ஒ) வருடாந்த மதிப்பீடு செய்யப்பட்ட நிருவாகச் செலவினத்தைப் பரிசீலனை செய்தபின்னர் அத்துடன் அவசியமாயின் மீளாய்வு செய்த பின்னர் அதனை அங்கீகரித்தல்.

15. (1) சபையானது, வேலையின் தன்மையையும் அளவையும் கருத்திற்கொண்டு, சபையுறுப்பினர்கள் அவசியமெனக் கருதுகின்றபோதிலெல்லாம் கூடுதல் வேண்டும் ; ஆயின், அது ஆகக்குறைந்தது அரையாண்டுக்கொருதடவையாவது சனவரி மாதத்திலும் யூலை மாதத்திலும் கூடுதல் வேண்டும். சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் ஒவ்வோராண்டும் சனவரி மாதத்தில் நடைபெறுதல் வேண்டும். சபையின் கூட்டங்கள்.

(2) சபையின் எவரேனும் உறுப்பினர், ஒருவார எழுத்திலான அறிவித்தலைக் கொடுப்பதன்மூலம் சபையின் கூட்டமொன்றைக் கூட்டலாம்.

(3) சபையின் தவிசாளர் சமுகமாயிருப்பின் சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதிருப்பின், சமுகமாயிருக்கும் உறுப்பினர்களுளிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(4) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) தவிசாளர் அல்லது சபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமைதாங்குகின்ற வேறு உறுப்பினர், தமது சொந்த வாக்குடன் சேர்த்து அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, சபையானது, சபையின் கூட்டங்கள் பற்றியதும், அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் பற்றியதுமான நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(7) சபை உறுப்பினர்களுக்கடையே ஏதேனும் அபிப்பிராய பேதம் ஏற்படும் பட்சத்தில், பெரும்பான்மையோரின் முடிவே பிணிப்பதாகவும் பயனுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

(8) சபையின் செயல் எதுவும் அல்லது நடவடிக்கைகள் எவையும், அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகவோ அல்லது செல்லுபடியற்றனவாகவோ கருதப்படுதலாகாது.

(9) உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி, சபைக் கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகளையும், அவற்றின் பரப்புகையையும் கட்டுக்காப்பையும், மற்றும் சபையின் நடவடிக்கைகள் தொடர்பான எல்லாப் பதிவேடுகளையும் செம்மையான முறையில் பேணுவதனைச் செய்வித்தல் வேண்டும்'

நிதியத்தின் இலச்சினை.

16. நிதியத்தின் இலச்சினையானது-

(அ) சபை காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்;

(இ) சபையின் அனுமதியுடனன்றியும் சபையின் இரு உறுப்பினர்களினதும் உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியினதும் முன்னிலையிலன்றியும் ஏதேனும் ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர், தாம் சமுகமாயிருந்தமைக்கு அத்தாட்சியாக அந்த ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி, சபையின் தாபன மற்றும் செயலாண்மைத் துறைசார்ந்த தேவைப்பாடுகளை வழங்குதல்.

17. உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி, சபையின் எல்லா நிருவாக மற்றும் செயலாண்மைத்துறை சார்ந்த தேவைப்பாடுகளை வழங்குவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும். சபையின் பணியாட்டொகுதிக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியமும் படிகளும், அரசாங்க நிருவாக அமைச்சினால் காலத்துக்குக்காலம் அங்கீகரிக்கப்படுகின்றவாறான வீதங்களுக்கிணங்கவிருத்தல் வேண்டும்.

சபை உறுப்பினர்களின் ஊதியம்.

18. நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களிலான அத்தகைய ஊதியமும் படிகளும் சபை உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

அறிக்கைகள்.

19. உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி,' நட்டோத்தரவாதத்துக்கான உரிமைக்கோரிக்கைகள் தொடர்பான எல்லா ஆவணங்களையும், கூற்றுக்களையும், பெறுமான மதிப்பீட்டு அறிக்கைகளையும் மற்றும் வேறு அறிக்கைகளையும் பெறுவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி, அத்தகைய ஆவணங்களையும், கூற்றுக்களையும், அறிக்கைகளையும், அவற்றின்மீதான அவரது அவதானிப்புகளுடனும் விதப்புரைகளுடனும், சபைக்கு, அதன் கூட்டங்களில், சரியாகவும் எல்லாவற்றையும் உள்ளடக்குகின்ற முறையிலும் முன்வைப்பதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

தொடர் நடவடிக்கை.

20. உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி, ஆவணங்களையும், கூற்றுக்களையும், அறிக்கைகளையும் தயாரித்தலும் முன்வைத்தலும், புலனாய்வுகளும், சட்ட வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தலும் மற்றும் நிதியத்தின்

முறையான பணியாற்றுகையை உறுதிப்படுத்துவதற்கான பரிகரிப்பு வழிமுறைகளும் என்பன தொடர்பாகச் சபையின் விதப்புரையின்மீது தொடர் நடவடிக்கை எடுப்பதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

அத்தகைய தொடர் நடவடிக்கை தொடர்பில் எடுக்கப்பட்ட எல்லா வழிமுறைகளையும், அத்தகைய தொடர் நடவடிக்கையின் பெறுபேறுகளையும் அவர் சபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

### பாகம் III

### நட்டோத்தரவாதம்

21. சட்டத்தின் 58 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும் 59 ஆம் பிரிவினதும் மற்றும் 60 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, நட்டோத்தரவாதமானது, நீதிமன்றக் கட்டளையொன்றின்மீது மட்டுமே செலுத்தப்படுதல் வேண்டும். நட்டோத்தரவாதம்.

22. (1) நட்டோத்தரவாதத்துக்காக உரிமைகோருகின்ற ஆளொருவர், எந்தக் காணிக்காக உரித்தின் அல்லது எந்தக் காணியிலான அக்கறையின் மோசடியான அல்லது பிழையான பதிவு தொடர்பாக நட்டோத்தரவாதம் உரிமை கோரப்படுகின்றதோ அந்தக் காணியின் உரித்து அல்லது அந்தக் காணியிலான அக்கறை மோசடியாக அல்லது பிழையாகப் பதிவுசெய்யப்பட்டதிலிருந்து மூன்றாண்டுகளினுள் நட்டோத்தரவாதத்துக்காக உரிமைகோரி நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுத்தல் வேண்டும். நடவடிக்கை முறை.

(2) உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி எதிராளியொருவராக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நட்டோத்தரவாதம் எந்த நட்டம் தொடர்பில் உரிமைகோரப்படுகின்றதோ அந்த நட்டத்தை எந்த ஆளின் அல்லது ஆட்களின் மோசடி விளைவித்தோ அல்லது அதற்கு உதவியதோ, அந்த ஆள் அல்லது ஆட்கள் கூட்டு எதிராளி அல்லது எதிராளிகள் ஆக்கப்படுதலும் வேண்டும்.

23. பிராதானது மற்றவற்றுக்கிடையில் பின்வரும் விபரங்களைத் தருதல் வேண்டும் :- பிராது.

(அ) நடத்தை உற்றதாக உரிமைகோருகின்ற ஆளின் அல்லது ஆட்களின் பெயர் அல்லது பெயர்கள் ;

(ஆ) எந்தக் காணியின் அல்லது காணியிலான அக்கறையின் பதிவு, நட்டத்தை விளைவித்துள்ளதோ அந்தக் காணியின் அல்லது காணியிலான அக்கறையின் அடையாளம் ;

(இ) நட்டத்தை ஏற்படுத்தியுள்ளவரென அல்லது ஏற்படுத்தியுள்ளவர்களெனச் சார்த்தப்பட்ட ஆளின் அல்லது ஆட்களின் பெயர் அல்லது பெயர்கள் ;

(ஈ) தகைமைபெற்ற பெறுமான மதிப்பீட்டாளரொருவரினால் மதிப்பிடப்பட்ட நட்டத்தின் பெறுமான மதிப்பீடு.

24. உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி, பிரதான பெறுமான மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட்ட சார்த்தப்படும் நட்டத்தின் பெறுமான மதிப்பீடொன்றை நீதிமன்றத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும். பெறுமான மதிப்பீடு.

25. (1) நட்டோத்தரவாதக் கொடுப்பனவை நீதிமன்றம் கட்டளையிடுமிடத்து, அத்தகைய நட்டோத்தரவாதம், அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருந்தாலொழிய, நீதிமன்றக் கட்டளையிலிருந்து மூன்று மாதங்களினுட் செலுத்தப்படுதல் வேண்டும். நட்டோத்தரவாதம் மூன்று மாதங் களினுட் செலுத்தப் படுதல்.

(2) அத்தகைய நட்டோத்தரவாதக் கொடுப்பனவு மூன்றுமாதக் காலப்பகுதிக்கப்பால் தாமதமாகும் விடயத்தில், முழுமையான தொகை கொடுப்பனவு செய்யப்படும்வரை, அத்தகைய நட்டோத்தரவாதத் தொகையின்மீது அல்லது செலுத்தப்படாதுள்ளவாறான அதன் அத்தகைய பாகத்தின்மீது சட்டப்படியான வீதத்திலான வட்டி செலுத்தப்படுதல் வேண்டும்.

### நட்டோத்தரவாதக் கொடுப்பனவுக்கான நடைமுறை

26. நட்டோத்தரவாதக் கொடுப்பனவுக்கான நீதிமன்றக் கட்டளையைப் பெற்றதன்மேல், உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி, சபையின் அங்கீகாரத்துக்காக, பின்வரும் விபரங்களைக் கொண்டுள்ள கூற்றொன்றுடன் சேர்த்து நட்டோத்தரவாதக் கொடுப்பனவுக்கான அவரது அதிகாரவளிப்பைச் சமர்ப்பித்தல் வேண்டும் :- உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி, கொடுப்பனவுக்காக சபையின் அங்கீகாரத்தை நாடுதல்.

(அ) பிரச்சினையிலுள்ள காணியின் அடையாளம் அல்லது காணியிலான அக்கறையின் தன்மை ;

(ஆ) எந்தக் காணியின் அல்லது காணியிலான அக்கறையின் பதிவு, நட்டோத்தரவாதத்துக்கான உரிமைக்கோரிக்கையை விளைவித்ததோ அக்காணியினது அல்லது காணியிலான அக்கறையினது சொந்தக்காரரின் அல்லது சொந்தக்காரர்களின் பெயர்களும் முகவரிகளும் ;

(இ) உரிமைக்கோரிக்கையின் தன்மையும், வழக்கெழுவினாக்களும், நீதிமன்றத்தில் எண்பிக்கப்பட்ட நட்டோத்தரவாதத்துக்கான உரிமைக்கோரிக்கை எழுந்தமைக்குக் காரணமாகவிருந்த காரணிகளும் ;

(ஈ) உரிமைகோரப்பட்ட நட்டோத்தரவாதத் தொகை ;

(உ) சபையினால் விதந்துரைக்கப்பட்ட நட்டோத்தரவாதத் தொகை ;

(ஊ) உரிமைக்கோரிக்கைகள் பற்றிய புலனாய்வுகளின் முக்கிய அம்சங்கள் ;

(எ) உரிமைகோரிக்கை தொடர்பில் நடாத்தப்பட்ட புலனாய்வுகளின் தன்மையும் நோக்கெல்லையும் பற்றிய அறிக்கை ;

(ஏ) எந்த நட்டம் தொடர்பில் நட்டோத்தரவாதம் உரிமைகோரப்படுகின்றதோ அந்த நட்டத்தினதாகப் பிரதான பெறுமான மதிப்பீட்டாளரினால் செய்யப்பட்ட பெறுமான மதிப்பீடு ;

(ஐ) பிரதான பெறுமான மதிப்பீட்டாளரினால் கொடுக்கப்பட்டதும், நட்டோத்தரவாதத்தின் இறுதிப் பெறுமான மதிப்பீட்டின் மீதானதுமான சபையுறுப்பினர்களின் அவதானிப்புகள் பற்றிய பரிசீலனை ;

(ஒ) நட்டோத்தரவாதத்துக்கான உரிமைக்கோரிக்கை எழுந்தமைக்குக் காரணமாவிருந்த நட்டத்துக்குப் பொறுப்பாகவிருந்த ஆட்களின் பெயர்கள் ;

(ஓ) பந்தி (ஒ) இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுள் ஒவ்வொருவரினதும் குற்றமுடைமையின் தன்மையும் அளவும், அத்தகைய ஆட்களிடமிருந்து அறவிடப்படவேண்டுமெனச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட முறையான தொகைகளும் ;

(ஔ) நட்டோத்தரவாதத்துக்கான உரிமைக்கோரிக்கை பற்றிச் சபையினாலான புலனாய்வுகளின் நிகழ்ச்சிக்குறிப்புகள் ;

(க) உரிமைக்கோரிக்கை தொடர்பில் நீதிமன்றத்தின் தீர்ப்பு.

சபையானது, கூற்றில் அடங்கியுள்ள விபரங்களினதும் தகவலினதும் சரிபிழையை நிச்சியித்த பின்னர், சபையின் தீர்மானத்தின்மூலம் நட்டோத்தரவாதக் கொடுப்பனவை அங்கீகரித்தல் வேண்டும்.

சான்றிதழ்.

27. நட்டோத்தரவாதக் கொடுப்பனவை அங்கீகரிக்கின்ற சபையின் தீர்மானத்தைப் பெற்றதன்மேல், உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியானவர், உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட பொருளளவில் படிவம் ஆர்ஜீர்/ஐஎவ்/1 இல் மும்ப்பிரதிகளிலான சான்றிதழொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

அத்தகைய சான்றிதழ் சபையுறுப்பினரொருவரினாலும் உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியினாலும் கையொப்பமிடப்படல் வேண்டும். ஒரு பிரதி மத்திய வங்கிக்கும், ஒரு பிரதி நிதியம் அதன் கணக்கை எவ்வங்கியில் பேணுகின்றதோ அவ்வங்கிக்கும் முன்வைக்கப்படுதல் வேண்டுமெனபதுடன், உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி, செலுத்தப்படவேண்டுமென நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்ட தொகைக்கு உரிமைக்கோரிக்கையாளரின் பெயரில் வரையப்பட்டவொரு காசோலையை நீதிமன்றத்தில் வைப்பிலிடுதலும் வேண்டும்.

பரிகரிப்பு நடவடிக்கை எடுக்கப்படுதல்.

28. உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி, நட்டோத்தரவாதக் கொடுப்பனவை அவசியமாக்கிய காரணங்களையும், எதிர்காலத்தில் நட்டோத்தரவாதக் கொடுப்பனவுக்கு இட்டுச்செல்லக்கூடிய எவையேனும் காரணிகளையும் பரிகரிப்பதற்கான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

29. உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி, நட்டோத்தரவாதமாகச் செலுத்தப்பட்ட தொகையை அறவிடுவதற்காகவும் நிதியத்தினால் உறப்பட்ட ஏனைய செலவுத் தொகைகளை அறவிடுவதற்காவும்- *எவ்வாட்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பது.*

(அ) எந்த ஆளின் மோசடி நட்டோத்தரவாதக் கொடுப்பனவை அவசியமாக்கியதோ அந்த ஒவ்வோர் ஆளுக்கெதிராகவும் ;

(ஆ) உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி, திணைக்களத்தைச் சேர்ந்த எந்த அலுவலரின் மோசடி அல்லது பாரதூரமான அசட்டை நட்டோத்தரவாதக் கொடுப்பனவை அவசியமாக்கியதோ அந்த ஒவ்வோர் அலுவலருக்கெதிராகவும்,

வழக்குத் தொடுத்தல் வேண்டும்.

## பாகம் IV

### நிதியத்தின் நிதி நிருவாகம்

30. நிதியத்தின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். *நிதியத்தின் நிதியாண்டு.*

31. உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி, சட்டத்தின்கீழ் உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதியினால் பெறப்பட்ட எல்லாக் கட்டணங்களினதும் நாற்பது சதவீதத்தை, ஒவ்வொரு மாதத்துக்காகவும் அடுத்துவரும் மாதத்தின் பத்தாம் தேதிக்கு முன்னர் நிதியத்தின் கணக்குக்கு அனுப்புதல் வேண்டும். *கட்டணங்களின் 40% நிதியக் கணக்குக்கு அனுப்பப்படுதல்.*

32. முப்பத்திமூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி, நிதியத்தின் இக்கணக்கிலுள்ள பணங்களை நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்ட நட்டோத்தரவாதத்தைச் செலுத்துவதற்கும், அரசாங்கத்துக்கான கடன்களைத் திருப்பிகொடுப்பதற்காகவும் பயன்படுத்துதல் வேண்டும். *கணக்கிலிருந்தான கொடுப்பனவுகள்.*

33. முப்பத்தோராம் பிரிவின்கீழ் நிதியத்தின் கணக்கினுட் செலுத்தப்பட்ட சட்டத்தின்கீழான கட்டணங்களின் இருபத்தைந்து சதவீதம், பின்வரும் செலவுகளை ஈடுசெய்யும் நோக்கத்துக்காகப் பதிவாளர் தலைமை அதிபதியின் கணக்கினுட் செலுத்தப்படுதல் வேண்டும் :- *நிதியத்தை நிருவகிப்பதில் உறப்பட்ட செலவுகள்.*

(அ) அத்தகையவொரு நிதியத்தின்மீது வழமையாக விதிக்கப்படும் எவையேனும் நிதிசார் சேவையளித்தல் இறுப்பனவுகள் ;

(ஆ) பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களிடமிருந்து சேதவீடுகளை அறவிடுதல் சம்பந்தமான சட்டச் செலவுகள் :-

(i) பிழையான உரித்துப் பதிவுக்கு இட்டுச்செல்கின்ற மோசடி ;

(ii) மோசடியான முறையில் அல்லது அசட்டையான முறையில் உரித்து இடாப்பில் பிழையான விபரங்களைப் பதிவீடு செய்தல்.

(இ) காப்புறுதித் திட்டத்தை முகாமை செய்வதற்கு நேரடியாகத் தொழிலுக்கமர்த்தப்பட்ட பணியாட்டொகுதிக்குச் சம்பளமும் படிகளும் கொடுப்பனவு செய்தல் ;

(ஈ) அத்தியாவசிய அலுவலகச் சாதனங்களுக்கும் எழுது கருவிவகைகளுக்கும் கொடுப்பனவு செய்தல் ;

(உ) சபையுறுப்பினர்களுக்கான படிகளைக் கொடுப்பனவு செய்தல் ;

(ஊ) உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதித் திணைக்களத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு செலவுகளைக் கொடுப்பனவு செய்தல் ;

(எ) நிதியத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தமைக்காகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குக் கொடுப்பனவு செய்தல் ; அத்துடன்

(ஏ) நிருவாகச் செலவுத் தொகைகள்.

திரட்டு நிதியத்துக்கான கொடுப்பனவுகள்.

34. சட்டத்தின்கீழ் செலுத்தப்பட்ட எல்லாக் கட்டணங்களினதும் அறுபது சதவீதம் திரட்டுநிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

நிதியத்துக்கான வங்கிக் கணக்கு.

35. உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி, மத்திய வங்கியினால் விதந்துரைக்கப்பட்டவொரு வங்கியில் நிதியத்துக்கான கணக்கொன்றைத் திறத்தல் வேண்டும்.

கணக்குகளும் பணங்களைக் கைமாற்றுதலும்.

36. (1) உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்:-

(அ) நிதியத்தின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றி முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் ;

(ஆ) ஒவ்வொரு மாதத்துக்காகவும் சட்டத்தின்கீழான கட்டணங்களின் அத்தகைய சேகரிப்புப் பற்றி முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் ; அத்துடன்

(இ) நிதியத்துக்குப் பணங்களைக் கைமாற்றுதலின் சரியாந்தன்மைக்காகவும் இயைபாந் தன்மைக்காகவும்.

(2) உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி, ஒவ்வோராண்டும் திசெம்பர் முப்பத்தோராம் திகதியன்றுள்ளவாறாக நிதியத்தின் புத்தகங்களைச் சமன் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், அடுத்த மாச்சு முப்பத்தோராம் திகதிக்கு முன்னர், முதற்குறிப்பிடப்பட்ட தேதிவரை தயாரிக்கப்பட்ட நிதியத்தின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் சுருக்கமொன்றைக் கொண்டுள்ள வருமான, செலவினக் கணக்கொன்றையும் ஐந்தொகையொன்றையும் தயாரிக்கச் செய்தலும் வேண்டும்.

(3) வருமான, செலவினக் கணக்கும் ஐந்தொகையும் உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதியினாலும், சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றின்மூலம் அவ்வாறு செய்தவற்கு அதிகாரமளிக்கப்பட்ட சபையுறுப்பினரொருவரினாலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

முதலீடுகள்.

37. (1) உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி, சபையின் முன்னங்கீகாரத்துடன் மட்டுமே நிதியத்தின் மூலதனத்தை அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்யலாம்.

(2) சபையானது, (அ) என்னும் பந்தியின் நோக்கத்துக்காக, அமைச்சரினதும், நிதியமைச்சரினதும், மத்திய வங்கியினதும் மதியுரையையும் ஒருப்பாட்டையும் பெறுதல் வேண்டும்.

காப்புறுதி நிதியத்துக்காகத் தனிவேறான கணக்கு.

38. உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதி,காப்புறுதி நிதியத்தைத் தொழிற்படுத்துவதற்காகத் தனது புத்தகங்களில் தனிவேறான கணக்கொன்றைப் பேணுதல் வேண்டும்.

கொடுப்பனவுகளை அங்கீகரித்தல்.

39. உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி, இக்கணக்கிலிருந்தான ஒவ்வொரு கொடுப்பனவையும் அங்கீகரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கொடுப்பனவைச் சான்றுப்படுத்துவதற்கு மேலதிக அல்லது பிரதி உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியொருவருக்கு அதிகாரமளித்தலும் வேண்டும்.

பதிவாளர் தலைமை அதிபதி திறைசேரிச் சுற்றறிக்கைகளைப் பின்பற்றுதல்.

40. திணைக்கள மற்றும் நியதிச்சட்டமுறையான நிதியங்கள் தொடர்பில் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட பொதுத் திறைசேரிச் சுற்றறிக்கைகளைப் பின்பற்றுதல், உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

## பாகம் V

### கணக்காய்வு

கணக்காய்வு.

41. (1) நிதியத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(2) கணக்குப் புத்தகங்களும் பதிவேடுகளும் கணக்காய்வுக்காகக் கண்கசாய்வாளர் தலைமையதிபதிக்குக் கிடைக்கக்கூடியனவாக்கப்படுதல் வேண்டும்.

(3) பின்வரும் கணக்குகள் பற்றிய கூற்று, திறைசேரியின் ஒழுங்குபடுத்துகைப் பிரிவுத் தலைவருக்கான பிரதியொன்றுடன், கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு, ஒவ்வொரு கணக்கீட்டாண்டும் முடிவடைந்த பின்னர் நான்கு மாதங்கள் முடிவுறுமுன்னர், நிதியம் தொடர்பில் அளிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) ஆண்டின்போதான பெறுகைகளும் கொடுப்பனவுகளும் பற்றிய ஒரு கூற்று ;

(ஆ) ஆண்டுக்கான வருமானமும் செலவினமும் பற்றிய ஒரு கூற்று ;

(இ) ஆண்டின் முடிவிலுள்ளவாறாகச் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய ஒரு கூற்று ; அத்துடன்

(ஈ) மத்திய வங்கியில் நிதியத்தின் வரவிலிருக்கும் மீதியைச் சான்றுபடுத்துகின்ற மத்திய வங்கியிடமிருந்தான ஒரு கூற்று.

(4) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களினதும் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், நிதியத்தினது கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு நிதியத்தின் கணக்குகளைக் கணக்காய்வதில் அவரினால் உறப்பட்ட அத்தகைய செலவுகள் நிதியத்தின் பணங்களிலிருந்து மீளளிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

### நிதியத்தை நிருவகிப்பதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள்

42. நிதியத்தின் நிருவாகம் தொடர்பாக, உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியினால் பின்வரும் நடவடிக்கைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும் :- நடவடிக்கை முறைகள்.

(அ) ஒவ்வொரு மாதத்தின் முடிவிலும் காசுப்புத்தக மீதி நிதியத்தின் வங்கி மீதியுடன் கணக்கிணக்கஞ் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) வழங்கப்பட்ட உரித்துச் சான்றிதழ்களின் இலக்கங்களையும் உரித்துப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சேவைகளையும் பதிவதற்கு "ஆர்ஜீரீ/ஐஎவ்02" ஆம் இலக்க அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் குறித்துரைக்கப்பட்டவாறாக உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியின் தலைமையலுவலகத்தினால் இடாப்புகள் பேணப்படுதல் வேண்டும். பொருளளவில் ஆர்ஜீரீ/ஐஎவ்03 ஆம் இலக்க அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில், இருவாரங்களுக்கொரு தடவை உரித்துப் பதிவாளரினால் அனுப்பப்பட்ட விபரத்திரட்டுக்கிணங்க இடாப்பில் பதிவீடுகள் செய்யப்படுதல் வேண்டும் ;

(இ) பொருளளவில் ஆர்ஜீரீ/ஐஎவ்03 ஆம் இலக்க அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் இருவாரங்களுக்கொரு தடவை உரித்துப் பதிவாளரினால் அனுப்பப்பட்ட விபரத்திரட்டின் பிரதி, உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியின் அலுவலகத்தில் கோப்பிடப்படுதல் வேண்டும் ;

(ஈ) பிரதான காசுப்புத்தகமொன்று, பொதுப் படிவம் 50 இல் உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியினால் பேணப்படுதல் வேண்டும் ;

(உ) ஒவ்வொரு பதினான்கு நாட்களும் முடிவடைவதன்மேல் உரித்துப் பதிவாளர்களினால் சேகரிக்கப்பட்ட தொகை, உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியினால் பிரதான காசுப்புத்தகத்துக்குத் தனிவேறாகப் பற்றுவைக்கப்படுதல் வேண்டும் ;

(ஊ) செலுத்தப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும் ஒவ்வொரு நாளின்கீழும் வரவுகளாகப் பதிவீடு செய்யப்படுதல் வேண்டும். கொடுப்பனவு உறுதிச்சீட்டின் தேதியும், உறுதிச்சீட்டு இலக்கமும், கொடுப்பனவுப் பேரேட்டின் விவரணமும், பக்க இலக்கமும், தொகையும், கொடுப்பனவுக் கோவையும், காசுப் புத்தகத்தின் வரவுப் பகுதியில் பதிவீடு செய்யப்படுதல் வேண்டும் ;

(எ) நட்டோத்தரவாதக் கொடுப்பனவுக்காக நீதிமன்றம் கட்டளையிடுமிடத்து, உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி, பொருளளவில் ஆர்ஜீரீ/ஐஎவ்04 ஆம் இலக்க அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில், நட்டோத்தரவாதக் கொடுப்பனவுக்காக உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியின் அலுவலகத்தினது பிரதான கணக்கீட்டாளருக்குச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும் .

(ஏ) மாதத்தின் முடிவில்-

(1) இறுக்கப்பட்ட கட்டணங்களின் நாற்பது சதவீதம் நிதியத்தின் கணக்குக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும். நாற்பது சதவீதத்தில் இருபத்தைந்து சதவீதம், காப்புறுதி நிதியத்தை நிருவகிப்பதற்காக உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியின் கணக்குக்கு அனுப்பப்படுதல் வேண்டும். நிருவாகச் செலவுத்தொகைகளுக்காக உரித்துப்பதிவாளர் தலைமையதிபதிக்கு வரவுவைக்கப்பட்ட இருபத்தைந்து சதவீதத்திலிருந்து (25%) எஞ்சியுள்ள ஏதேனும் மீதி நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும் ;

(2) கணக்குக்குக் கைமாற்றப்பட்ட பணம், பொருளாளவில் ஆர்ஜீர்/ஜஎவ்05 ஆம் இலக்க அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் மாதாந்தம் கைமாற்றப்படுதல் வேண்டும் ;

(3) கட்டணங்களின் அறுபது சதவீதம் (60%) திரட்டு நிதியத்துக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(4) ஒவ்வொரு மாதத்தின் முடிவிலும் மீதியெதுவும் காசுப் புத்தகத்திலோ அலல்து வங்கிக் கணக்கிலோ எஞ்சியிருத்தலாகாது.

## பாகம் VII

### வரைவிலக்கணங்கள்

சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"அமைச்சர்" என்பது, உரித்துப் பதிவாளர் தலைமையதிபதித் திணைக்களத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் என்று பொருளாகும்.

"சட்டம்" என்பது, 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் என்று பொருளாகும்.

"அங்கீகரிக்கப்பட்ட படிவம்" என்பது, உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு படிவம் என்று பொருளாகும்.

படிவம் ஆர்ஜிரீ/ஐஎவ்A/1
(பிரிவு 27)

## நட்டோத்தரவாதக் கொடுப்பனவுக்கான அங்கீகாரச் சான்றிதழ்

***1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 62 ஆம் பிரிவு***

காப்புறுதி நிதியத்தின் முகாமைச் சபை.......................................ஆந் தேதியன்று (தேதி) கூடியதுடன், பின்வரும் நிரலில் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்குப் பின்வரும் நட்டோத்தரவாதக் கொடுப்பனவுகளை அங்கீகரித்துள்ளதென இத்தால் சான்றுப்படுத்தப்படுகின்றது.

| இல. | காணித்துண்டு இல. | ஆளின் பெயர் | முகவரி | நீதிமன்றக் கட்டளை இலக்கமும் திகதியும் | அங்கீகரிக்கப்பட்ட நட்டோத்தரவாதத் தொகை | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

கையொப்பம் ........................... ........................... ........................... ........................... ........................... ...........................

தவிசாளர் முகாமைச் சபை — உறுப்பினர் — உறுப்பினர் — உறுப்பினர் — உறுப்பினர் — உறுப்பினர்

பெயர் :.......................................

தேதி : .......................................

படிவ இல. ஆர் ஜீரீ/ஜஎவ் 02.
(பிரிவு 42).

தலைமையலுவலகம்
உரித்துப் பதிவாளர்களினால் அனுப்பப்பட்ட விபரத்திரட்டுக்கிணங்கச்
சேகரிக்கப்பட்ட பணங்கள் பற்றிய இடாப்பு
சேகரிப்புகள்

| மாதம் | விபரத் திரட்டு இல. | பிரிவு | சான்றிதழ்களை வழங்குதல் ரூபா | சான்றிதழ்களை மீள வழங்குதல் ரூபா | இடாப்புகளைப் பரிசோதனை செய்தல் ரூபா | பொழிப்புகளை வழங்குதல் ரூபா | பதிவுக் கட்டணங்கள் ரூபா | ஏனையவை ரூபா | மொத்தத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஏ.<br>பி.<br>சீ.<br>டி.<br>ஈ.<br>எவ். | | | | | | | |
| மாதாந்த மொத்தம் | | | | | | | | | |

மத்திய வங்கிக்குச் செய்யப்படவேண்டிய கைமாற்றம்

சேகரிக்கப்பட்ட மொத்தப் பணம் ..........................................................................
காப்புறுதி நிதியக் கணக்குக்குக்
கைமாற்றப்படவேண்டிய நூற்று வீதம்

திரட்டு நிதியத்துக்குக் கைமாற்றப்படவேண்டிய தொகை ...............................

உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதியின் கணக்கு

தயாரித்தவர் :

செவ்வை பார்த்தவர் :

கணக்காளர்.

படிவ இல. : ஆர்ஜீர்/ஜஎவ் 03 (பிரிவு 42)

உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி,
உரித்துப் பதிவாளர் தலைமையதிபதித் திணைக்களம்,
பத்தரமுல்லை.

**வழங்கப்பட்ட உரித்துச் சான்றிதழ்களும் வழங்கப்பட்ட சேவைகளும் பற்றிய இருவாரங்களுக்கொரு தடவையான விபரத்திரட்டு**
**(.......................................................எல்.ஆர்)**

***சேகரிக்கப்பட்ட கட்டணங்களின் விபரங்கள்***

| விபரத்திரட்டின் தொடரிலக்கம் | வழங்கப்பட்ட உரித்துச் சான்றிதழ்களின் இலக்கங்கள் | சான்றிதழ்களினதும் வழங்கப்பட்ட சேவைகளினதும் விபரங்கள் | தேதி | பீ. வீ. இல. | தொகை இல. |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை (14 நாட்களினுள்) | | | | | |

மேலே கொடுக்கப்பட்ட விபரங்களின்படி சேகரிக்கப்பட்ட.......................................ரூபாவான மொத்தத் தொகை, இலங்கை வங்கியின் தப்ரொபேன் கிளையிலுள்ள.................................. ஆம் இலக்க கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளதெனச் சான்றுபடுத்துகின்றேன்.

உரித்துப் பதிவாளரின் கையொப்பம்...............................
பெயர்:
...................................................................................
...................................................................................
(பிரிவு)

**குறிப்பு:** பணஞ்செலுத்தியமைக்கான உறுதிச்சீட்டின் 3 ஆவது பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்

படிவ இல. : ஆர்ஜீர்/ஜஎவ் 04 (பிரிவு 42)

உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியின் தலைமையலுவலகம்,
.......................................வங்கிக்கு,
.......................................

## நட்டோத்தரவாதமும் ஏனைய செலவுத்தொகைகளும் கொடுப்பனவு செய்யப்பட்டமைக்கான சான்றுப்படுத்துகை

### நீதிமன்றக் கட்டளையின் விபரங்கள்

| திகதி | நட்டோத்தரவாதம் அளித்தமைக்கான காரணங்கள் | கட்டளைத் திகதி | கட்டளையின் குறிப்பீட்டு இல. | நீதிமன்றம் | பணம்பெறுபவரின் பெயர் | நீதிமன்றக் கட்டளையின் மீது செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவின் தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

மேலே கொடுக்கப்பட்ட விபரங்களின்படி .......................................ரூபாவான பணத்தொகை.......................................என்பவரானபணம்பெறுநருக்குச் செலுத்தப்பட வேண்டுமென.......................................இலுள்ள.......................................நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

.......................................இலுள்ள.......................................நீதிமன்றத்தினால் கொடுக்கப்பட்ட கட்டளையின்மீது செலுத்தப்படவேண்டிய நட்டோத்தர வாதமாக...........
.......................ரூபாவான பணத்தொகையின் கொடுப்பனவை இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

.......................................................................
உரித்துப் பதிவாளர் தலைமை அதிபதியின்
கையொப்பம்.

பிரதி : மத்திய வங்கி

படிவ இல. : ஆர்ஜீர்/ஜஎவ் 05
(பிரிவு 42)

எனது இல............................
உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியின்
அலுவலகம்,
கொழும்பு 11
2009,..............................

.................................................
மத்திய வங்கி.

**காப்புறுதி நிதியம் - (1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்)**

மேலேயுள்ள நிதியத்துக்கு வரவுவைக்கப்படுவதற்கென................................................ரூபா தொகைக்காக......................................ஆந் தேதியிடப்பட்ட..............................ஆம் இலக்கக் காசோலையை இத்தால் இணைக்கின்றேன்.

கணக்காளர்,
உரித்துப் பதிவாளர் தலைமையதிபதித் திணைக்களம்.

9-244